

# 2

# நிலமகள்

கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும்! அடர விதைத்தால் அறுப்போர் உயர்வர்!!

ஆடிப்பட்டம் தேடிவிதை!

மணலுழுது வாழ்ந்தவனும் இல்லை. மண்ணுழுது கெட்டவனும்இல்லை.

பருவத்தே பயிர் செய்!

அகல உழுவதை ஆழ உழு!

- இந்தப் பழமொழிகள் எதைக் குறிப்பிடுகின்றன?
- இந்தப் பழமொழிகளில் அடங்கியுள்ள கருத்துகளை வரிசைப்படுத்துங்கள்.
- வேளாண்மையோடு தொடர்புடைய வேறு பழமொழிகளைக் கூறுங்கள்.



# உழவன்

தண்டமிழைக் கற்றிட்ட நல்லுழவன் – இந்தத்
தமிழினத்தார் போற்றியேற்கும் வல்லுழவன்
கழனியெலாம் சுற்றிநின்று நீந்திடுவான் – அதன்
காடுமேடு பரம்படிக்கச் சேர்ந்திடுவான்
நல்வித்து ஊன்றியுமே விளைத்திடுவான் – அதன்
நல்விளைவில் மகிழ்ந்துமே திளைத்திடுவான்
கார்பொழிய ஏர்தொட்டு வணங்கிடுவான் – நல்ல
கார்ஊன்ற வேளாண்மை வழங்கிடுவான்
பாட்டாளி வர்க்கத்தின் மேலோனாம் – அவன்
பாரோர்க்குத் தொண்டனாகக் காண்போனாம்
ஏற்றமிகு விளைபொருளை ஈவானாம் – நல்ல
ஏர்கட்டிப் பாருலகை ஆள்வானாம்.



உழைப்பினிலே பொருள்தேடித் திரட்டுவானாம்
– உண்ணும்
உணவுடனே அறநெஞ்சம் ஊட்டுவானாம்
சமுதாயப் பெருந்தோழன் அன்னவனே
– வாழத்
தகுந்தநெறி செயல்காட்டும் மன்னவனே
பாரெல்லாம் படியளக்கும் நம்தெய்வம்
–அவன்
பாட்டாளிப் பரம்பரையின் குலதெய்வம்!

– அறிவுமதி

## செயல்பாடுகள்

- பாடலை இசையோடு பாடுங்கள்.

- “பாட்டாளி வர்க்கத்தின் மேலோனாம் - அவன்

  பாரோர்க்குத் தொண்டனாகக் காண்போனாம்.”

  இவை கவிஞர் உழவனை வருணிக்கும் வரிகள் ஆகும். வேறு எவ்வாறெல்லாம் வருணிக்கிறார்? அந்தக் கருத்துகளை உரைநடை வடிவில் எழுதி வகுப்பில் வெளியிடுங்கள்.

- பாட ன் மையக்கருத்தைக் குழுவாக அமர்ந்து கலந்துரையாடிக் கண்டுபிடியுங்கள். குறிப்பாக எழுதி வகுப்பில் வாசியுங்கள்.

- காளையினை ஓட்டுகின்றான்

  களிப்புடனே தொடர்கின்றான்

  மாலை வரும் நேரம் வரை

  வய னிலே உழைக்கின்றான்

  ..........................................................................................................

  ..........................................................................................................

  ..........................................................................................................

  ..........................................................................................................

  ..........................................................................................................

  ..........................................................................................................

  மேற்குறிப்பிட்ட கவிதையை முழுமைப்படுத்திப் பொருத்தமான தலைப்பும் அளியுங்கள்.

- வேளாண்மைத் தொடர்பான கவிதைகளைத் திரட்டுங்கள், உங்களுக்கு விருப்பமான கவிதையை வகுப்பில் பாடுங்கள்.

# திருக்குறள்

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

ஏரினும் நன்றால் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு

இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்.

திருவள்ளுவர்

- உலகிலுள்ள அனைவரது வாழ்க்கைக்கும் ஆதாரமாக விளங்குகின்றவர் கள் உழவர்களே. எனவே உலகம் என்னும் தேருக்கு அச்சாணியாக விளங்குகின்றனர் உழவர் பெருமக்கள்.
- உலகம் எவ்வாறெல்லாம் சுழன்றாலும் அது உழவுத்தொழிலை அடிப்படை யாகக் கொண்டே இயங்குகின்றது. எனவே எத்தகைய வருத்தத்தைத் தந்தா லும் உழவுத்தொழிலே மேன்மையானதாகக் கருதப்படுகின்றது.
- ஏரால் உழுதலை விடச் சிறந்தது எரு இடுதலாகும். அதைப் போன்று களை பறித்து நீர்ப்பாய்ச்சுதலைவிட மேலானது அப்பயிரைப் பாதுகாத்த லாகும்.
- எமக்கு எதுவுமே இல்லை, யாம் வறுமையுடையோம் என்று சொல் சோம்பி இருப்பாரைக் கண்டால் நிலமகள் சிரித்து இகழ்வாள்.
- உழவுத்தொழிலைச் செய்து, அதனால் கிடைக்கும் விளைபொருட்களைத் தானும் உண்டு, பிறருக்கும் கொடுத்து வாழ்கின்ற உழவர்களே சிறந்த வாழ்க்கை வாழ்கின்றவராவார். மற்றையோர் எல்லாம் பிறரை வணங்கி உணவு கொண்டு, அவர் பின்னே செல்லும் வாழ்க்கையை மேற்கொள் கின்றவர் ஆவர்.

மேலே திருக்குறளின் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இவ்விளக்கங்களுக்கு உகந்த குறள்பாக்களைப் பாடப்பகுதியில் கண்டுபிடித்துக் கூறுங்கள்.

# அறுவடை

பொன்னன் : வெளஞ்ச நெல்லை அறுக்கும் போது
என்னடி பேச்சு – பொன்னி
என்னடி பேச்சு – இதை
வீடு கொண்டு சேர்க்க வேணும்
மணியென்ன ஆச்சு – பொன்னி
மணியென்ன ஆச்சு?

பொன்னி : அறுத்த நெல்லை எடுத்துப் போக
ஆள்வரு வாரு – பொன்னா
ஆள்வரு வாரு – நெல்லை
அள்ளிக் கிட்டு நமக்குக் கொஞ்சம்
கூழ்தரு வாரு – பொன்னா
கூழ்தரு வாரு!

பொன்னன் : தை பிறந்தா வழி பிறக்கும்
கேளடி கேளு – பொன்னி
கேளடி கேளு – ஒரு
சமயம் வந்தா இமயங் கூடக்
கூழடி கூழு – பொன்னி
கூழடி கூழு!

பொன்னி : தை பிறக்கும் முன் பிறந்த
தேசத்தைப் பாரு – பங்களா
தேசத்தைப் பாரு – மக்கள்
சக்தி யாலே வெற்றி கொண்ட
சரித்திரம் நூறு – அந்த
சரித்திரம் கூறு!

**–கவிஞர் மு.மேத்தா**





# நிலமெனும் நல்லாள்

ராமதுரை ஒரு பி.எஸ்.ஸி. பட்டதாரி. ஐந்து ஆண்டுகளாக அவன் பல இடங்களில் முயற்சித்தும் அவனது படிப்பிற்குத் தகுந்த வேலை கிடைக்கவில்லை. ராமதுரைக்கு வேலை கிடைக்கவில்லையே என்ற வருத்தம் மனதிற்குள் இருந்தது. ஒரு நாள் மாலை நேரம். ராமதுரையும் அவனது அப்பாவும் டவுனுக்குப் பொருட்கள் வாங்குவதற்காகப் புறப்பட்டுச் சென்றனர்.

வழிநெடுகப் பேசிக்கொண்டே சென்றனர். "மகனே! கவலைப்பட வேண்டாம். வேலை கிடைக்கும்போது கிடைக்கட்டும். கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்? நமக்கு இருக்கும் ஐந்து ஏக்கர் நிலத்திலே பாடுபட்டாலே போதும். அப்படித்தானே! யாருக்கிட்டயும் கைகட்டி நிக்க வேண்டாமே" என்றார். "நிலத்தில் இறங்கிப் பாடுபடவா நான் பட்டதாரி ஆனேன்? அப்படிச் செய்தால் யாராவது என்னை மதிப்பார்களா அப்பா!" என்றான் ராமதுரை.



"ஏன் மதிக்கமாட்டார்கள்? பணம் இருந்தால் எல்லோரும் மதிப்பார்களே! இப்படியே இருந்தால்தான் யாரும் மதிக்கமாட்டார்கள்" எனக் கூறினார் அப்பா. "ஆனாலும் பட்டதாரியாகிய நான் நிலத்தில் இறங்கி மண்ணும் தூசியும் பட்டு வேலை செய்வது சரியா அப்பா?" என்று கேட்டான் ராமதுரை.

"ஏன் சரியில்லை? இன்று செல்வந்தர்களாக மதிப்புடனும் மரியாதையுடனும் வாழ்பவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் நன்றாகப் பாடுபட்டவர்கள்தான் என்பதை மறக்காதே! உழைப்பில் இழிவில்லை என்று நீ கேட்டதில்லையா?"



அப்பா சொன்னது ராமதுரையைச் சற்று யோசிக்க வைத்தது.

தன் தந்தையின் கூற்றில் நியாயம் இருப்பதாக நினைத்தான் ராமதுரை. மறு நாளி ருந்து அவனும் நிலத்தில் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்தான்.

“குறிப்பிட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் அதிகப்படியான விளைச்சல் காண்பிப்ப வர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படும்” என்ற அறிவிப்பை ஒரு நாள் வானொ யில் கேட்டான் ராமதுரை, அவன் மூளை வேலை செய்ய ஆரம் பித்தது. முயன்றால் முடியாதது இல்லை என்பது முதுமொழி. தோல்விகள் என் பவை முற்றுப் பெறாத முயற்சிகளே! எப்படியும் அந்தப் பரிசை வாங்கிவிட நினைத்தான் ராமதுரை. இது தனக்கு விட்ட ஒரு சவால் என்றே எண்ணினான்.

நிலத்தின் மண் மாதிரிகளை எடுத்துப் பரிசோதனை செய்தான்; பலமுறை உழுதான்; தரமான விதைகளை விதைத்தான்; பயிர்களைப் பூச்சிகள் தாக்கா மல் இருக்க மருந்துகள் தெளித்தான். தொலைக்காட்சி, வானொ விவசாயச் செய்திகளைக் கேட்டான். வேண்டிய நேரங்களில் தண்ணீரைப் பாய்ச்சினான். கதிர்விளைந்து முற்றியது. விவசாயத்துறைக்கு அறிவிப்புச் செய்து விட்டு அறு வடைக்குக் காத்திருந்தான்.

அதிகாரிகள் வந்தனர். நிலம் அறுவடையானது. அவர்கள் எதிர்பார்த்த தற்கு மேல் மகசூல் கிட்டியது. ராமதுரையின் நுண்ணறிவும், அவனுடைய தந் தையின் ஒத்துழைப்பும் அவனுக்கு நிலத்தின் விளைச்ச ல் முதல் பரிசைத் தேடித் தந்தது.




நிலமெனும் நல்லாள் முதல் பரிசைத் தேடிக் கொடுத்தாள்.

எத்தனையோ நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்று வெற்றி கிட்டாத அவனுக்குப் பாராட்டுக் கூட்டத்தில் பணமுடிப்பைக் கொடுத்துப் பேசிய மாவட்ட அதிகாரி "ராமதுரை போன்ற படித்த இளைஞர்கள் வேலை தேடி நகரங்களுக்கு ஓடுவதை விடுத்துத் தங்கள் அறிவையும், உழைப்பையும் விவசாயத்தில் செலவழித்தால், பாரத நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறும்; மேழிச்செல்வம் கோழைபடாது" என்று கூறினார். ராமதுரைக்குப் பெருமையாகவும் பெருமிதமாகவும் இருந்தது.

**-அருள்நம்பி**

## செயல்பாடுகள்

- கதையை வாசித்து மனதைக் கவர்ந்த பகுதியைக் கூறுங்கள்.
- நிலத்தைப் பூமித்தாய் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பூமித்தாய் என்பது நிலத்திற்கு எவ்வாறெல்லாம் பொருந்துகிறது? விவாதித்துக் குறிப்பாக எழுதுங்கள்.
- ஸ் 'முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை'என்பது ஒரு முதுமொழி. இம்முதுமொழியை உறுதிப்படுத்தும் கதை நிகழ்வை எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் நடைபெறும் பல்வேறு விவசாயமுறைகளைப் பற்றிய தகவல்களைத் திரட்டிச் சிறு கட்டுரையாக வெளியிடுங்கள்.
- வானொ , தொலைக்காட்சி, பத்திரிகைச்செய்திகளில் வரும் விவசாயம் தொடர்பான செய்திகளையும் படங்களையும் திரட்டி விவசாய மலர் தயார் செய்து பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் வெளியிடுங்கள்.
- கீழ்வரும் செயலை நாளை நடப்பதாக மாற்றி எழுதுங்கள்.
  - அவன் பலமுறை உழுதான்.
  - அவன் தரமான விதைகள் விதைத்தான்.
  - அவன் அறுவடைக்குக் காத்திருந்தான்.

# வயலும் வாழ்வும்

*(வகுப்பில் வெளியிட இருக்கும் 'உழவர்மலர்' இதழுக்காகப் புதூர் அரசு நடுநிலைப்பள்ளி ஆறாம் வகுப்பு மாணவர்கள், கிராமத்து உழவர் பெருமகனார் ஒருவரை நேர்கண்டனர். உழவுத்தொழில் தொடர்பான சில செய்திகளைத் தெரிந்துகொண்டனர். தீபக், முனியன், மல்   கா, கவிதா ஆகிய மாணவ மாணவிகள் இந்நேர்காணல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.)*

மாணவர்கள்   ஐயா, வணக்கம்!

விவசாயி : வணக்கம்! வணக்கம்!! மொதல்ல எல்லாரும் உக்காருங்க. ஆமா... நீங்கள்லாம்...?

மாணவர்கள் : நாங்கள் புதூர் பள்ளி மாணவர்கள்.உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறோம் ஐயா.

விவசாயி : பேட்டியா!...... பேட்டி காண்கிற அளவுக்கு நான் ஒண்ணும் பெரிய ஆளில்லையே!!

மாணவர்கள் : அப்படியெல்லாம் சொல்லாதீங்க...... உங்களைப்போன்ற உழவர்கள்தான் உலகத்துக்கு அச்சாணி என்று நாங்கள் படித்திருக்கின்றோம்.

விவசாயி : கேட்க ரெம்பவும்சந்தோசமா இருக்கு... உங்களுக்கு என்னென்ன தெரிஞ்சுக்கணும்?கேளுங்க... தெரிஞ்சதைச் சொல்றேன்.

(ஒவ்வொருவராகக் கேள்விகள் கேட்கத் தொடங்குகின்றனர்.)

தீபக் ; ஐயா! உங்கள் பெயரைத் தெரிஞ்சுக்கலாமா?

விவசாயி : சின்னச்சாமீன்னு பேரு... சின்னா அப்படீன்னு அழைப்பாங்க.

கவிதா ; ஐயா! நீங்க எதுவரைப் படிச்சிருக்கீங்க?

விவசாயி : (சிரிக்கிறார்) புள்ளைகளா! நான் பள்ளிக்கூடம் போனதில்லே..... அந்தக் காலத்திலே படிக்கிற வசதி எதுவும் இங்க இல்லையே... ஆனாலும் எழுத்தறிவு இயக்கத்துக்குப் போய் எழுத வாசிக்கத் தெரிஞ்சுகிட்டேன்.

மல்   கா : ஐயா! நீங்க விவசாயத் தொழிலுக்கு வந்து எவ்வளவு காலம் ஆகிறது?

விவசாயி : கொழந்தே! எனக்கு விவரம் தெரிஞ்ச நாளிலருந்து இந்த வயக்காட்டில தான் உழச்சிட்டிருக்கேன்,

முனியன் : இப்போது என்னென்ன பயிர் செய்றீங்க ஐயா?

விவசாயி : அந்தக் காலத்திலே நெல்லு, ராகி, சோளம், கம்பு, தினைன்னு எல்லாத்தையும் வெள்ளாமை செய்திட்டிருந்தோம், இ ப் பே ா நெல்லு மட்டுந்தான் போடுறோம்,

தீபக் : ஐயா! நீங்க எந்த வகையான உரங்களைப் பயன்படுத்துறீங்க?

விவசாயி : உரங்கள்லே ரெண்டு வகை இருக்கு,,, ஒண்ணு இயற்கை

உரம்,,, இன்னொண்ணு ரசாயன உரம், ரசாயன உரம் போட்டா அதிக மகசூல் கிடைக்கும், ஆனா அது உடம்புக்குக் கேடு, நாங்க இயற்கை உரங்களைத்தான் பயன்படுத்துறோம்,

கவிதா : ஐயா! நவீன விவசாய முறைகளைப் பயன்படுத்துகிறீர்களா?

விவசாயி : இல்லம்மா,,, அந்த அளவுக்கு எங்களுக்கு நிலம் இல்லையே,,! கலப்பையும் காளைமாடும் தான் எங்களுக்கு எல்லாமே,,,, ஒரு காலத்திலே மயிலக்காளை, செவலக்காளை எல்லாம் வச்சிருந் தோம், தீனிபோட முடியல்லேன்னு வித்திட்டோம்,,, நெறைய நிலம் இருக்கிறவங்க டிராக்டர், டிரில்லர், குப்போட்டா, டிரிப் அப் படி இப்படீன்னு ஏகப்பட்ட எந்திரங்களைப் பயன்படுத்துறாங்க,

முனியன் : சொந்தமா எவ்வளவு நிலம் வச்சிருக்கீங்க ஐயா?

விவசாயி : என்ன,,, ரெண்டு குழி வயலும் மூணு பொத்தை தரிசும் இருக்குது... அவ்வளவுதான்,

மல் கா : அப்படீன்னா என்னங்கயைா?

விவசாயி : இப்ப ஹெக்டர்னு சொல்றாங்களே,,,, அதுபோல அந்தக் காலத் திலே தடி, குழி, காணி, பொத்தை அப்படீன்னு எல்லாம் சொன் னாங்க,,, எல்லாமே நில அளவைகள்தான்,

தீபக் : ஐயா! நஞ்சை நிலம், புஞ்சை நிலம் என்றெல்லாம் சொல்கிறார் களே! அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்,

விவசாயி : நஞ்சை நிலம்னா தண்ணீர் வளம் அதிகமா இருக்கும், இந்த மாதிரி நிலத்துலதான் விவசாயம் செய்யமுடியும், கொஞ்சம் காஞ்ச நிலந்தான் புஞ்சை நிலம், இந்தமாதிரி நிலத்திலே கம்பு, சோளம் பயிரிடலாம்,

கவிதா : ஐயா! இப்போதெல்லாம் உழவுத்தொழில் நஷ்டம் என்று சொல் கிறார்களே! உண்மையா?

விவசாயி : ஓரளவுக்கு உண்மைதாம்மா! இது வானம் பாத்த பூமி, முன்பெல் லாம் முப்போகமும் மழை பெய்யும்,,,,, இப்பத்தான் காலம் மாறிப் போச்சே,,! பருவம் மாறி மழை பெய்யுது, அதுதான் ஒரு பிரச் சனை,

மல் கா : அப்படீன்னா?

விவசாயி : இன்னின்ன காலத்திலே மழை பெய்யும்,,, இன்னின்ன காலத்திலே வெயிலடிக்கும் அப்படீன்னு ஒரு ஒழுங்கு இருந்தது,,, இப்ப எல் லாம் தலைகீழ்தான்,,, மழையை எதிர்பார்த்து வெதைவெதச்சா மழையே இல்லாம பயிரெல்லாம் கருகிப்போவுது,,, சில நேரங்க ளிலே திடீர்னு மழை பெஞ்சு வெளஞ்ச பயிரை எல்லாம் அழுக வச்சிருது,

முனியன் : இப்போது நெல் பயிர் செய்வதில் மக்களின் ஆர்வம் குறைந்து வருகிறது என்று சொல்கிறார்களே! அது உண்மையா?

விவசாயி : உண்மைதான்,,, அதிலென்ன சந்தேகம்? உழுது, வெதை வெதச்சு, நாற்று நட்டு, ஏத்தம் இறைச்சு, களைபிடுங்கி, உரம்போட்டு, பூச்சிமருந்து அடிச்சு, அறுவடைசெய்து, சூடடித்து, காத்தில் பொ தூற்றித்தான் நெல்மணிகளை எடுக்கணும், இப்போது அதுக்கெல்லாம் ஆளுே கிடைக்க மாட்டேங்குது. கூ குறை வுன்னு வேறுவேலைக்குப் போயிடுறாங்க,, அது மட்டுமில்லே; இப்ப எல்லாருக்குமே பணப்பயிர் மேல்தான் ஆசை,

தீபக் : பணப்பயிர்னா என்னங்க?

விவசாயி : தென்னை, ரப்பர் போன்ற பயிர்களைப் பணப்பயிர் அப்படீன்னு சொல்வாங்க. இவையெல்லாம் விளைச்சல் கொடுக்க அதிக நாளாகும்,

முனியன் : அப்படீன்னா அதுவரையிலும் விவசாயிகள் என்ன செய்வாங்க?

விவசாயி : நல்ல கேள்வி! அதுவரைக்கும் ஊடுபயிராக பயிறு, தக்காளி, வெண்டை, கத்திரி, கடலை அப்படி எதாவது வெள்ளாம செய் வாங்க,

கவிதா : ஐயா,,,! உங்க ,,, குடும்பத்தைப் பற்றி,,,,,

விவசாயி : மனைவி, ரெண்டு குழந்தைங்க,,, மனைவி எனக்கு ஒத்தாசையா வயலுக்கு வருவா,,, மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் ஆயிடுச்சு, ரெண்டாவது பையன் படிச்சிட்டிருக்கான்,

மல் கா : ஐயா! மிக்க மகிழ்ச்சி, உங்களிடமிருந்து விவசாயம் தொடர்பான பல விஷயங்களைத் தெரிந்துகொண்டோம், கடைசியா ஒரு கேள்வி. ஒரு விவசாயி என்ற முறையில் இன்றைய இளம் தலை முறைக்கு நீங்கள் சொல்லும் கருத்து என்னங்க?

விவசாயி : நான் என்ன சொல்றதுக்கு! விவசாயந்தான் இந்த உலகத்தின் ஆணி வேரு,,, அவ்வப்போது சில இடையூறுகள் வரலாம், ஆனா லும் பூமித்தாய் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டா,,, நிச்ச யமா காப்பாத்துவா, அவ்வளவு தான்,

மாணவர்கள் : மிக்க நன்றி ஐயா. எங்கள் பள்ளியின் சார்பிலும் எங்களது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,,,, வணக்கம்.

விவசாயி : வணக்கம்,,, சந்தோஷமா போய்வாருங்க,

## செயல்பாடுகள்

- பழங்காலப் பயிர்களாக விவசாயி கூறுவது என்ன? உரையாடலை வாசித்துக் கண்டு பிடியுங்கள்,
- வேளாண்மை தொடர்புடைய சொற்களைக் கண்டுபிடியுங்கள்? எழுதுங்கள்,
- உங்கள் வட்டாரத்திலுள்ள வேளாண்மை அலுவலரை சந்தித்து நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்,

## நான் தெரிந்துகொண்டவை

- விவசாயம் இல்லை என்றால்... என்ன நிகழும்? எழுதுங்கள்.

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

- "இப்போது அதுக்கெல்லாம் ஆளு கிடைக்க மாட்டேங்குது, கூலி குறைவுன்னு வேறு வேலைக்குப் போயிடுறாங்க." இது விவசாயியின் கூற்று. இதுபற்றி உங்கள் கருத்துகளை எழுதுங்கள்.

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................